*9*

# ஒரு வருத்தத்தின் பாடல்

## (4:13-22)

*தேவனுடைய நகரமான எருசலேமின் சிதைவுகளினூடே நடந்து கொண்டிருந்த எரேமியா, அழிவிற்கான காரணத்தை ஆழ்ந்து சிந்தித்தார். பெருந்துன்பம் தாக்குகின்றபோது நாம், குற்றம் சாட்டுவதற்கு நமக்கு அப்பால் எதையேனும் அல்லது யாரையேனும் கண்டறிய முயற்சி செய்கின்றோம். மோசமான ஏதொன்றும் நடந்தால் அதற்குப் பொறுப் பேற்பதற்கு நாம் தயங்குவதால், உண்மையான காரணங்கள் பெரும்பாலும் இரகசியமானவைகளாக, ஆழ்மனதின் பின்புறச் சாலைகளில் ஒளிக்கப் பட்டவைகளாகவே இருக்கின்றன. நம்மையே ஏன் ஒரு குற்றப்பயணத் திற்கு அனுப்பவேண்டும்? உண்மையை நோக்கி ஏன் ஒரு குற்றம்சாட்டும் விரலைச் சுட்ட வேண்டும்? அது என்ன நன்மையைச் செய்யும்?*

*யூதா மற்றும் எருசலேம் மக்கள் ஏன் அழிவைக் கண்டனர் என்பதை அவர்கள் அறிய வேண்டும் என்று தேவன் விரும்பினார்! எருசலேம் நினைத்துப்பார்த்துக் கற்றுக்கொள்ள வேண்டும் என்று அவர் விரும்பினார். மக்கள் ஏன் துன்புற்றனர் என்பதை அவர்களுக்குக் கூறுவதற்காகத் தேவன் எரேமியாவை அவர்களிடம் அனுப்பினார்:*

> *அதின் நடுவில் நீதிமான்களின் இரத்தத்தைச் சிந்தின அதின் தீர்க்கதரிசிகளின் பாவங்களினாலும், அதின் ஆசாரியர்களின் அக்கிரமங்களினாலும் இப்படி வந்தது. குருடர்போல வீதிகளில் அலைந்து, ஒருவரும் அவர்கள் வஸ்திரங்களைத் தொடக்கூடாதபடி இரத்தத்தால் கறைப்பட்டிருந்தார்கள். ''விலகுங்கள், தீட்டுப் பட்டவர்களே!" "தொடாமல் விலகுங்கள், விலகுங்கள்!" என்று அவர் களை நோக்கிக் கூப்பிட்டார்கள், மெய்யாய்ப்பறந்தோடி அலைந்து போனார்கள், "இனித் தங்கித் தரிக்கமாட்டார்கள்" என்று புறஜாதி களுக்குள்ளே சொல்லப்பட்டது. கர்த்தருடைய கோபம் அவர்களைச் சிதறடித்தது, அவர்களை இனி அவர் நோக்கார், ஆசாரியருடைய முகத்தைப் பாராமலும் முதியோரை மதியாமலும் போனார்கள். இன்னும் எங்களுக்குச் சகாயம் வருமென்று நாங்கள் வீணாய் எதிர்பார்த்திருந்ததினாலே எங்கள் கண்கள் பூத்துப்போயின, இரட்சிக்கமாட்டாத ஜாதிக்கு எதிர்பார்த்துக்கொண்டிருந்தோம். நாங்கள் எங்கள் வீதிகளிலே நடவாதபடிக்கு எங்கள் அடிச்சுவடுகளை வேட்டையாடினார்கள், எங்கள் முடிவு சமீபித்தது, எங்கள் நாட்கள் நிறைவேறிப்போயின, எங்கள் முடிவு வந்துவிட்டது. எங்களைப் பின்தொடர்ந்தவர்கள் ஆகாயத்துக் கழுகுகளைப் பார்க்கிலும் வேகமாயிருந்தார்கள், பர்வதங்கள்மேல் எங்களைப் பின்தொடர்ந்*

*தார்கள், வனாந்தரத்தில் எங்களுக்குப் பதிவிருந்தார்கள். கர்த்தரால் அபிஷேகம்பண்ணப்பட்டவனும், எங்கள் நாசியின் சுவாசமாயிருந்த வனும் அவர்களுடைய படுகுழியில் அகப்பட்டான், "அவனுடைய நிழலிலே ஜாதிகளுக்குள்ளே பிழைத்திருப்போம்" என்று அவனைக் குறித்து சொல்லியிருந்தோமே. ஊத்ஸ்தேசவாசியாகிய எதோம் குமாரத்தியே, சந்தோஷித்துக் களிகூரு, பாத்திரம் உன்னிடத்திற்கும் தாண்டிவரும், அப்பொழுது நீ வெறித்து, மானபங்கமாய் கிடப்பாய். சீயோன் குமாரத்தியே, உன் அக்கிரமத்துக்கு வரும் தண்டனை தீர்ந்தது, அவர் இனி உன்னை அப்புறம் சிறைப்பட்டுப்போகவிடார், ஏதோம் குமாரத்தியே, உன் அக்கிரமத்தை அவர் விசாரிப்பார், உன் பாவங்களை வெளிப்படுத்துவார் (4:13-22).*

*தேவனுடைய மக்கள் பல ஆண்டுகளாக, வெற்றியின் அணிவகுத்தல் என்று நினைத்துக் கொண்டு, ஒரு சவஅடக்கப் பாடலை நோக்கி அணிவகுத்துச் சென்றிருந்தனர் என்பதை அவர்கள் புரிந்து கொள்ள வேண்டும் என்று தேவன் விரும்பினார். அவர்கள் வழிவிலகி நடத்தப் பட்டிருந்தனர், மற்றும் அவர்கள் அதைப் பற்றி அறிவது அவசியமாக இருந்தது.*

*அழிவுக்கு அழைத்துச் செல்லும் பாதையானது மென்மையான தளமிடப்பட்டதாக, ''நல்லது என்று உணருகின்ற'' அடையாளங்கள் வரிசையாக வைக்கப்பட்டதாக, வழிநெடுகிலும் சந்தோஷப் பெருமூச்சு விடச்செய்யும் காட்சி நிறுத்தங்கள் கொண்டதாக இருக்கலாம். இந்தச் சாலையின் வழியே செல்லும் பயணமானது ஒரு சந்தோஷச் சுற்றுலாவாகக் காணப்படலாம், ஆனால் அது அழிவில் முடிவதற்கென்று நியமிக்கப் பட்டுள்ளது. எருசலேம் மக்கள் சென்றுகொண்டிருந்த பாதையானது அழிவின் பாதையாக இருந்ததாக எரேமியா அவர்களுக்கு நாற்பது ஆண்டுகள் அளவாக எச்சரிக்கை செய்திருந்தார். அவர்கள் சென்ற பாதைவழியானது அவர்களுக்குச் சரியானதென்று காணப்பட்டதாலும் அவ்வாறே அவர்கள் உணர்ந்ததாலும், அவர்கள் அவரை நம்பவில்லை. காலங்கள் நன்றாக இருந்தன. மக்கள் நல்லிசைவு கொண்டிருந்தனர். அவர்கள் ஆபிரகாம், யூதா மற்றும் தாவீது ஆகியோரின் வழித்தோன்றல் களாய் இருந்தனர். அவர்கள் தேவனால் தேர்ந்துகொள்ளப் பட்டவர்களாய் இருந்தனர், மற்றும் அவர்கள் தேவனால் தேர்ந்துகொள்ளப்பட்டிருந்த தங்களுக்கு (அழிவுக்குரிய) ஏதொன்றும் நடைபெறத் தேவன் அனு மதிப்பார் என்று அவர்கள் நினைக்கவில்லை. காலந்தோறும் திரும்பத் திரும்ப அவர்கள் அழிவின் பாதையில் இருந்தனர், மற்றும் தேவன் அவர்களை எப்போதுமே முற்றிலும் வெற்றிகரமானவர்களாகக் கொண்டு வந்து சேர்த்திருந்தார். அவர்கள் விடுதலைக்கான தங்கள் தேசீயப் பாடல் களை நினைவுவைத்துக் கொண்டிருந்தனர். அவர்கள் கடந்த காலத்தினால் நிலைவரப்படுத்தப் பட்டவர்களாக, தங்கள் சாலை தங்களை எங்கே வழி நடத்திச் சென்றது என்பதைப் பற்றிச் சிறிதளவே சிந்தித்தவர்களாகி இருந்தனர்.*

*மக்கள் நினைவுகூருவதற்கு எரேமியா ஒரு புதிய பாடலைக் கொடுத்தார், அது யூதாவின் மக்களுக்கு என்ன நடந்திருந்தது என்று விளக்கப்படுத்தும் இரங்கற்பாடலாக இருந்தது. அழிக்கப்பட்ட தேசத்தைக் குறித்துப் பாடப்பட்ட இந்த இரங்கற்பாடலின் மூன்று சரணங்கள் 4:13-22ல் கவிதைத்துவ நடையில் அமைக்கப்பட்டுள்ளன. முதலில் நாம் இதன் முக்கிய சிந்தனைகளைக் கண்ணோக்குவோம். பின்பு இதை நெருக்கமாகக் கண்ணோக்குவோம். முதலாவது அவர்களின் தேவபக்தியற்ற நடத்து வத்தினால் அவர்களுக்கு அழிவு நேரிட்டது. புறதெய்வ வணக்கம் கொண்ட நாடுகளுடன் அவர்கள் பரிசுத்தமற்ற உடன்படிக்கைகளை ஏற்படுத்திக் கொண்டிருந்தனர் என்பது இரண்டாவது காரணமாக இருந்தது. மூன்றாவது, அவர்கள் தேவனைக் குறித்தும் அவர்களை அவர் பாதுகாத்தல் குறித்தும் நன்றியற்ற எண்ணப்போக்கைக் கொண்டிருந்தனர்.*

## தேவபக்தியற்ற நடத்துவத்துவம் *(4:13-16)*

*தீர்க்கதரிசிகளும் ஆசாரியர்களும் யூதசமுதாயத்தின் நடத்துனர்களாய் இருந்தனர். தீர்க்கதரிசிகள் பிரசங்கியார்களாய் இருந்தனர், மற்றும் ஆசாரியர்கள் தேவனுக்கும் ஜனங்களுக்கும் இடையில் மத்தியஸ்தர்களாய் இருக்க வேண்டியவர்களாயிருந்தனர். தேவனை மக்களுக்குப் பிரதி நிதித்துவப்படுத்தும் பொறுப்பைக்கொண்டிருந்த நிலையில் அவர்கள் யூதாவின் ஆவிக்குரிய நடத்துனர்களாய் இருந்தனர். அவர்கள், தேவன் தமது மக்களிடத்தில் இருக்கும்படி விரும்புகின்ற வாழ்வு மற்றும் பண்பு ஆகியவற்றிற்கு எடுத்துக்காட்டுகளாய் இருந்திருக்க வேண்டும். அவர்கள் மக்களைத் தேவனுடைய பிரசன்னத்திற்குள் வழிநடத்திச் சென்றிருக்க வேண்டும், இருப்பினும் அவர்கள் தாங்களே தேவனுடைய பிரசன்னத்தில் இருந்திருக்கவில்லை (வச. 13அ).*

*அவர்கள் மிகவும் நல்லிசைவு கொண்ட, மிகவும் பிரபலமான மற்றும் மிகவும் அதிகாரம் நிறைந்தவர்களுடன் இருக்க விரும்பினர். அவர்கள் புறஜாதி உலகத்தாருடன் ஒன்றுகலந்து, தங்களால் இயன்ற அளவுக்கு அவர்களைப் போல் ஆகி, அதேவேளையில் தேவனால் தேர்ந்து கொள்ளப் பட்டவர்கள் என்ற தோற்றத்தையும் பராமரித்துக் கொள்ள வேண்டும் என்று விரும்பினர். இவ்விதமான வாழ்க்கை முறையை மக்கள் விரும்பினர். அவர்கள், தேவனுக்கு உண்மையுள்ளவர்கள் என்று உரிமைகோரிக் கொண்டிருந்த அதே வேளையில், புறதெய்வக் கலாச்சாரத்தினால் அளிக்கப்பட்ட சந்தோஷங்களை மகிழ்வுடன் அனுபவித்தனர். நடத்து னர்கள், மக்கள் கேட்க விரும்பிய "நல்லதென்று உணரும்" பிரசங்கங்களைப் பிரசங்கித்தனர். அவர்கள் நீதியை மறுவிளக்கப்படுத்தி, தங்கள் அலைந்துதிரிதல்களையும் உண்மையற்ற தன்மையையும் காணாது விட்டனர். அவர்கள் தேவனுடைய சித்தத்தைச் செய்வதாகக் கூறித்திரிந்த அதே வேளையில் தாங்கள் விரும்பியவற்றைச் செய்யத் தங்களை அனு மதிப்பதற்கு, நியாயப்பிரமாணத்தில் "நழுவுதுளைகள்" உள்ளனவா என்று நோக்கிக்கொண்டிருந்தனர்.*

*அவர்களின் கள்ளத் தீர்க்கதரிசனங்கள் மற்றும் தீட்டான நடக்கைகள் பற்றி எரேமியா தமது பெயர்கொண்ட புத்தகத்தில் அதிகமாய்க் கூறியுள்ளார்:*

> *"தீர்க்கதரிசிகள் கள்ளத்தீர்க்கதரிசனம் சொல்லுகிறார்கள், ஆசாரியர்கள் அவர்கள் மூலமாய் ஆளுகிறார்கள், இப்படியிருப்பது என் ஜனத்துக்குப் பிரியமாயிருக்கிறது, ஆனாலும் முடிவிலே என்ன செய்வீர்கள்?" (எரே. 5:31)*
>
> *"அவர்களில், சிறியோர்முதல் பெரியோர்மட்டும், ஒவ்வொருவரும் பொருளாசைக்காரர், இதுவுமல்லாமல் தீர்க்கதரிசிகள்முதல் ஆசாரியர்கள் மட்டும் ஒவ்வொருவரும் பொய்யர். சமாதானமில்லாதிருந்தும்: 'சமாதானம், சமாதானம்' என்று சொல்லி, என் ஜனத்தின் காயங்களை மேற்பூச்சாய்க் குணமாக்குகிறார்கள். அவர்கள் அருவருப்பானதைச் செய்ததினிமித்தம் வெட்கப்படுகிறார்களோ? பரிச்சேதம் வெட்கப்படார்கள், நாணவும் அறியார்கள், ஆதலால் விழுகிறவர்களுக்குள்ளே விழுவார்கள், நான் அவர்களை விசாரிக்குங் காலத்தில் இடறுண்டுபோவார்கள்" என்று கர்த்தர் சொல்லுகிறார் (எரே. 6:13-15).*

*எரேமியா போன்ற - நீதிமானான ஒரு மனிதர் அவர்களுக்கு அறைகூறுவல் விடுக்கும்படி எழுந்தால், அவர்கள் அப்படிப்பட்ட மனிதன் சமுதாயத்தில் தனது செல்வாக்கை இழந்துபோகும்படி அம்மனிதர் மீது சூழ்ச்சி, தேவனுக்கு விரோதமாய் பேசுதல் அல்லது தேவதூஷணம் பேசுதல் என்ற குற்றம் சாட்டிவிடுவார்கள். மேலிடங்களில் அவர்களுக்கு இருந்த அதிகாரம் மற்றும் செல்வாக்கு ஆகியவற்றின் காரணமாக, அவர்கள் கொலையே செய்தாலும் அதிலிருந்து சுலபமாய்த் தப்பிக்க முடிந்தது. கடைசியில், அவர்கள் மீது நியாயத்தீர்ப்பு வந்திருந்தது. அவர்கள் பார்வையற்ற மனிதர்களைப் போல் மிரண்டு திகைத்தவர்களாய்த் தெருக்களில் அலைந்து திரிந்தனர். அப்படிப்பட்ட மனிதர்களைப் பற்றிப் பேசும்போது ஏசாயா, "நாங்கள் குருடரைப்போல் சுவரைப் பிடித்து, கண்ணில்லாதவர்களைப்போல் தடவுகிறோம், இரவில்இடறுகிறதுபோலப் பட்டப்பகலிலும் இடறுகிறோம், செத்தவர்களைப்போல் பாழிடங்களில் இருக்கின்றோம்" என்று கூறினார் (ஏசா. 59:10). குழப்பம் அடைந்து தங் களின் ஆவிக்குரிய இலக்கை இழந்துநின்ற மக்களின் நிலையைப் பற்றி ஏசாயா பேசிக்கொண்டிருந்தார். எந்தத் திசையில் திரும்புவது என்று அறியாத நிலையில் அவர்கள் நோக்கம் இன்றி அலைந்து திரிந்து கொண்டி ருந்தனர்.*

*யூதா நாட்டின் நடத்துனர்கள் மக்களை நியாயமின்றி நடத்தியதுடன் கூடுதலாக, குற்றம் அறியாதவர்களின் இரத்தத்தினால் தங்கள் உடைகளைக் கறைப்படுத்தியிருந்தனர் (வசனங்கள் 13, 14). அவர்களின் வருந்தத்தக்க சூழ்நிலையில் அவர்கள் தொழுநோயாளியின் கதறுதலை மேற் கொண்டவர் அல்லது அவர்கள் தொழுநோயாளர்கள் ஆனதுபோல்*

*சமூகத்தின் மக்கள் அவர்களை விலக்கி வைத்தனர் (வச. 15). தொழு நோயாளர்களின் உடல்நிலையானது மிகவும் தொற்று ஏற்படுத்தக் கூடியதாக இருந்ததால் அவர்கள் அசுத்தமானவர்கள் என்று கருதப் பட்டனர். அவர்கள் சமூகத்தில் இருந்த மற்ற மக்களுடன் உடல்ரீதியான தொடர்பு ஏற்படுத்திக் கொள்ளக் கூடாதிருந்தது. அவர்கள் தனிமைப் படுத்தப்பட்ட, தனிமையான வாழ்க்கையை வாழ்ந்தனர். மற்ற மக்களின் முன்னிலையில் அவர்கள் "தீட்டு! தீட்டு!" என்று உரத்துக் கூவும்படியாக நியாயப்பிரமாணம் கேட்டுக்கொண்டிருந்தது (லேவி. 13:45, 46), இது அவர்களிடத்திலிருந்து மற்றவர்கள் விலகியிருக்கும்படிக்கும், அவர்களும் தீட்டாகிவிடாதபடிக்கும் மற்றவர்களை எச்சரிப்பதாக இருந்தது.*

*யூதா நாட்டின் தேவபக்தியற்ற நடத்துனர்கள் தொழுநோயாளர் களைப் போலவே நாடற்றவர்கள் ஆயினர். அவர்கள் எந்த ஒரு தேசத்தின் மக்கள் மத்தியிலும் வசிக்க அனுமதிக்கப்படவில்லை. முரண்பாடான வகையில், அவர்கள் கர்த்தருடைய பிரசன்னத்தில் இருந்து சிதறடிக்கப் பட்டனர் (வச. 16). அவர்கள் தேவனுடைய சமூகத்தில் ஒன்றிணைக்கப் பட்டவர்களாக, மற்றவர்களை அவரது பிரசன்னத்திற்குக் கொண்டு வருவதற்குத் தங்களையே ஒப்புவித்தவர்களாக இருக்க வேண்டியிருந்தது. (ஆனால்) தேவனோ அல்லது மனிதரோ அவர்களுடன் எதுவும் கொண்டி ராதிருந்தனர். அவர்களின் உண்மை நிறம் அறியப்பட்டிருந்தது. அவர்களின் பொய்யான செய்திகள் தவறாயிருந்தன என்று நிரூபிக்கப்பட்டிருந்தது. அவர்கள் கூறுவதற்கு இனியும் ஒன்றும் கொண்டிராதிருந்தனர். அவர்கள் மக்களின் மத்தியில் மரியாதையை இழந்திருந்தனர். வியப்பு எதுவும் இல்லை! பரிசுத்தமாவதற்கு அவர்கள் உதவிசெய்திருக்க வேண்டியதாய் இருந்த மக்களே அவர்களின் பிரசன்னத்தினால் தீட்டாக்கப் பட்டிருந்தனர்.*

*பிரசங்கியார்களுக்கும் மார்க்கத்தின் நடத்துனர்களுக்கும் இது எவ்வளவாக விழித்தெழும்படிக் கூறும் அழைப்பாய் இருந்தது!*

> *இப்படியிருக்க, மற்றவனுக்குப் போதிக்கிற நீ உனக்குத்தானே போதியாமலிருக்கலாமா? களவுசெய்யக்கூடாதென்று பிரசங்கிக்கிற நீ களவுசெய்யலாமா? விபசாரம் செய்யக்கூடாதென்று சொல்லுகிற நீ விபசாரம் செய்யலாமா? விக்கிரகங்களை அருவருக்கிற நீ கோவில் களைக் கொள்ளையிடலாமா? நியாயப்பிரமாணத்தைக் குறித்து மேன்மைபாராட்டுகிற நீ நியாயப்பிரமாணத்தை மீறிநடந்து, தேவனைக் கனவீனம்பண்ணலாமா? எழுதியிருக்கிறபடி, "தேவனு டைய நாமம் புறஜாதிகளுக்குள்ளே உங்கள் மூலமாய்த் தூஷிக்கப் படுகிறதே" (ரோம. 2:21-24).*

*இந்த நாட்களில் பிரசங்கியார்கள் ஏராளமான எதிர்மறை கவனத்தைப் பெறுகின்றனர். நல்லவர்கள் கூடச் சிலவேளைகளில் மோசமானவர்களின் நிமித்தம் விரோதத்தினால் உபாதை அடைகின்றனர். உலகமானது ஒரு வரை மற்றவரிலிருந்து பிரித்து அறிவதில்லை. அவர்கள் எல்லா பிரசங்கியார் களையும் ஒரே வகையில் இடுகின்றனர். யாரோ ஒருவர், "ஒப்புக்கொடுத்தல்*

உள்ள பிரசங்கியாரை நாம் பெறமுடிந்தால், இந்த உலகத்தையே கிறிஸ்துவுக்காக எடுத்துச் செல்லமுடியும்" என்று கூறினார்.

சாத்தான் பிரசங்கியார்களை அறிந்திருக்கின்றான். பிரசங்கியார்கள் அறியாதவகையிலேயே அவர்களின் செய்திகளைப் பயனற்றதாக்குவதற்கு அவன் இரகசியமான வழிகளிலே அவர்களைச் சோதிப்பதற்கு அறிந்திருக் கின்றான். சபைகள் என்பவை சமூகத்தில் பரஸ்பரம் பாராட்டுதலைப் பெறுபவை என்பதை விடச் சற்றே அதிகமாக ஆக்கப்படுவதற்கு உலகத்தின் வெற்றி மற்றும் மதிப்பீட்டு முறை ஆகியவற்றில் பிடிக்கப்படுதல் என்பது மிகவும் சுலபமானதாக உள்ளது. அதிவேகத்தில் செல்லும் வியாபார சமூகத்தின் தராதர அளவுகளின் நிறைவேற்றத்திற்கு ஏற்ற வகையில் இருக்கும்படி எதிர்பார்க்கப்படுதலுக்காகப் பிரசங்கியார்கள் சபையின் "முதன்மைச் செயல் அலுவலர்கள்" என்பதைவிடச் சற்றே அதிகமாகச் செயல்படும்படி சோதிக்கப்படுகின்றனர்.

பிரசங்கியார்களும் மார்க்கத்தின் நடத்துனர்களும் தேவனுடைய பிரசன்னத்தில் வாழவும் அவரது பிரசன்னத்திற்கு மற்றவர்களைக் கொண்டுவரவும் முடிந்தது என்றால், அவர்கள் எரேமியாவைப் போலவே எதிர்ப்பைச் சந்திக்கலாம். மக்களில் பலர், ஞாயிற்றுக்கிழமை காலை வேளையில் ஒருமணி நேரம் சபைகூடிவருதல் என்பதைவிட அதிகமாகத் தேவனை விரும்புவதில்லை - மற்றும் அவர்கள் அந்த வேளையிலும் தாங்கள் விரும்பியவற்றைச் செய்வதற்கு அனுமதிக்கப்பட்டால் மாத்திரமே அதிலும் கலந்துகொள்கின்றனர். இருப்பினும், ஒப்புக்கொடுத்தல் உள்ள சில ஆத்துமாக்கள், அறிவிக்கப்படும் வசனத்தைக் கேட்பதற்கும் அதன்படி தாங்களே வாழ்வதற்கும் இன்னமும் களிப்புள்ளவர்களாய் இருக்கின்றனர். என்ன நடந்தாலும், அவர்கள் தேவனுடைய பிரசன்னத்தினால் நிரப்பப்பட விரும்புகின்றனர்.

அந்த மக்களுக்குப் பிரசங்கித்து அவர்கள் போஷிக்கப்படும்படி வழிநடத்துங்கள். தேவனைப் போதிய அளவுக்குப் பெற இயலாதவர் களுக்கு அறைகூவல் விடுவதற்காக அவர்களுக்குப் பிரசங்கித்து அவர்களை வழிநடத்துங்கள்.

## பரிசுத்தமற்ற உடன்பாடுகள் (4:17-19)

பாபிலோனின் படைகள் எருசலேமைச் சுற்றிச் சூழ்ந்திருந்தன. எவரொருவரும் நகருக்குள் நுழையவோ அல்லது நகரிலிருந்து வெளியேறவோ முடியாதிருந்தது. உணவுப்பொருட்கள் குறைந்திருந்தன. தண்ணீர்ப் பஞ்சம் ஏற்பட்டிருந்தது. மக்கள் பலவீனம் அடைந்து கொண்டிருந்தனர். அவர்களை யார் விடுவிப்பார்? எகிப்து ஒன்றுதான் தங்களின் நம்பிக்கை என்று அவர்கள் முடிவு செய்தனர். கடைசியில் பார்வோனின் படையானது எகிப்தில் இருந்து வந்த போது பாபிலோனியப் படையானது பின்வாங்கிற்று, இந்த வேளையில் எரேமியாவுக்குக் கர்த்தருடைய வார்த்தை உண்டாயிற்று:

“இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர் உரைக்கிறது என்னவென்றால், ‘என்னிடத்தில் விசாரிக்கும்படி உங்களை என்னிடத்திற்கு அனுப்பின யூதாவின் ராஜாவை நீங்கள் நோக்கி: இதோ, உங்களுக்கு ஒத்தாசையாகப் புறப்பட்ட பார்வோனின் சேனை தன் தேசமாகிய எகிப்துக்குத் திரும்பிப்போகும். கல்தேயரோவென்றால், திரும்பி வந்து இந்த நகரத்துக்கு விரோதமாக யுத்தம்பண்ணி, அதைப் பிடித்து, அக்கினியால் சுட்டெரிப்பார்கள்.'' ' ‘கல்தேயர் நம்மைவிட்டு நிச்சயமாய்ப் போய்விடுவார்களென்று சொல்லி, “நீங்கள் மோசம் போகாதிருங்கள், அவர்கள் போவதில்லை. உங்களோடே யுத்தம் பண்ணுகிற கல்தேயருடைய சேனையையெல்லாம் நீங்கள் முறிய அடித்தாலும், மீந்தவர்கள் எல்லாரும் காயம்பட்டவர்களாயிருந் தாலும், அவர்கள் தங்கள் கூடாரங்களிலிருந்து எழும்பி, இந்த நகரத்தை அக்கினியால் சுட்டெரிப்பார்கள்' '' என்று கர்த்தர் உரைக்கிறார் என்று சொல்லுங்கள் என்றார் (எரே. 37:7-10).

எகிப்தியப் படையானது நீண்டநாட்கள் அங்கே தங்கியிருக்கவில்லை. எரேமியாவின் முன்னுரைத்தலானது மிகவும் சரியானதாக இருந்தது: எகிப்தியர்கள் புறப்பட்டுச் சென்றபோது, பாபிலோனியப் படையானது திரும்பி வந்தது. யூதநாட்டினர் தங்களை மீண்டும் காப்பாற்றுவதற்கு எகிப்தியப் படை வருமென்று நம்பி வீணாக அடிவானத்தை ஆய்வு செய்தனர் (புல. 4:17). அவர்கள் தங்கள் கண்கள் பூத்துப்போகுமட்டும் கண்ணோக்கினர், ஆனால் எகிப்தியர்கள் ஒருக்காலும் திரும்பி வரவில்லை.

வேட்டை நாயானது தனது இரையைத் தேடிச்செல்வதற்கு ஒப்பாக மக்கள் வேட்டையாடப்பட்டனர் (வச. 18). அவர்கள் தாக்கப்படும் பயத்தி னால் தங்கள் சொந்த நகரத்தின் தெருக்களிலேயே நடக்கக் கூடாதிருந்தது. கடைசியில் அவர்களின் நம்பிக்கை அற்றுப்போயிற்று. பாபிலோனியப் பிரபுக்கள் நகரத்தின் நடுவாசலுக்கு வந்து அமர்ந்தபோது, முடிவு சமீபமாயிற்று, தங்களின் நாட்கள் எண்ணப்படுகின்றன என்பதை மக்கள் அறிந்தனர் (எரே. 39:3). பலவீனமான நிலையில், விரைவில் தாங்கள் போரிட இயலாதவர்களாகி விடுவோம் என்பதை அறிந்த நிலையில், அரசனின் படையானது தப்பிக்க முயற்சி செய்தது. யுதாவின் அரசரான சிதேக்கியா தனது பிரபுக்கள் மற்றும் படையினருடன் இரவுவேளையில் நகரத்தின் சுவரை இடித்துத் தப்பிச்செல்ல முயன்றார். அவர்கள், ‘‘ஆகாயத்துக் கழுகுகளைப்பார்க்கிலும் வேகமாயிருந்த'' (புல. 4:19) பாபிலோனியப் படையினால் துரத்தப்பட்டனர். அவர்கள் மலைகளில் துரத்தப்பட்டு, வனாந்தரத்தில் எதிர்பாராத வகையில் தாக்கப்பட்டு, பிடிக்கப்பட்டு, சிறையாக்கப்பட்டனர். சிதேக்கியாவின் மகன்களும் யூதாவின் பிரபுக்களும் கொல்லப்பட்டனர்; சிதேக்கியாவின் கண்கள் பிடுங்கப்பட்டன (எரே. 39:4-7).

எகிப்துடன் யூதா கொண்டிருந்த நீடித்த உடன்பாடானது விடுதலையைக் கொண்டுவரவில்லை. மக்கள் தங்களுக்கு உண்மையான விடுதலையை அளிப்பவரை மறந்திருந்தனர். தேவன் ஒருவர் மாத்திரமே செய்யக்கூடியவற்றிற்கு வேறுயாரையேனும் சார்ந்திருத்தல் என்பது

தேவனுடைய இராஜரீகத்திற்குச் செய்யப்படும் அவமானமாக உள்ளது. தேவன் தமது மக்களை விடுவிக்கும் தேவனாக இருக்கின்றார். வேதனை யிலிருந்தும் நமது தவறுகளின் விளைவுகளிலிருந்தும் நம்மை விடுவிப்பதற்கு உலகப் பிரகாரமான சில உடன்பாடுகளைச் சார்ந்திருத்தல் என்பது விக் கிர காராதனையின் ஒரு வடிவமாக உள்ளது. பரிசுத்தமற்ற உடன்பாடுகள் தேவனை அதிகம் விட்டுக் கொடுப்பதாகவும் அவரை மிகமோசமான வகையில் மறந்து விடுவதாகவும் உள்ளது. தேவன் சமரசப்படுத்தப்பட மாட்டார்! அவர், உதவிக்கும் ஆறுதலுக்கும் மற்ற ஆதாரமூலங்களைக் கண்டறிய நாம் முயற்சிசெய்து கொண்டிருக்கையில் காத்துக் கொண்டிருக்க மாட்டார்.

நாம் செல்வ வளம், சந்தோஷம் மற்றும் பிரபலத்தன்மை ஆகியவற்றின் மீது சார்ந்திருத்தலை வளர்த்துக் கொண்டு, இவைகள் நமக்கு மகிழ்ச்சியைக் கொண்டுவந்து, நமது குற்றங்களை மறக்க உதவிசெய்து, நமது வெறுமையை நிரப்பும் என்று நினைத்துக் கொண்டிருக்கின்றோம். நாம் நமது பணியில் நம்மை இழந்துபோய், அது நமக்கு நிறைவையும், நாம் ஏக்கத்துடன் எதிர் பார்த்திருக்கும் சமாதான உணர்வையும் கொண்டுவரும் என்று நினைத்துக் கொண்டிருக்கின்றோம். தேவனுடைய இருதயத்திற்குச் சமீபமாய் இருத்தல் என்பதே ஒரே விடுதலையாக உள்ளது.

## நன்றியற்ற எண்ணப்போக்கு (4:20-22)

வசனம் 20ல், "கர்த்தரால் அபிஷேகம் பண்ணப்பட்டவனும், எங்கள் நாசியின் சுவாசமாயிருந்தவனும்" என்பது சிதேக்கியா அரசரைக் குறிக்கிறது. அவரது நிழலில் யூதாவின் மக்கள் பாதுகாப்பை உணர்ந்தனர். அவர்கள் அநேகமாக, தேவனுடைய பாதுகாப்பு என்று குறிக்கப்பட்டதைக் காட்டிலும் அதிகமாக அவரது நடத்துவத்தில் நம்பிக்கை வைத்திருக்க மாட்டார்கள். அவர்களது அரசர் தேவனால் அபிஷேகம் பண்ணப்பட்டவர் என்று கண்ணோக்கப்பட்டது மட்டுமின்றி, அவர்கள் தேவனால் தேர்ந்துகொள்ளப்பட்ட மக்களாய் இருந்தனர்! சிதேக்கியா அரசர் பாபிலோன் நாட்டவரால் நியமிக்கப்பட்டிருந்த பொம்மை அரசராக இருந்த போதிலும், நாடுகளின் மத்தியில் தங்களுக்கு மேன்மையான இடம் இருக்கும் என்று அவர்கள் நினைத்திருந்தனர்.

யூதா மக்களுடைய வாழ்வின் பராமரிப்பு மற்றும் வசதிகள் ஆகியவற்றிற்கு மற்றவர்கள் சொந்தம் கொண்டிருந்தனர் என்பதை மக்கள் நம்பத் தொடங்கியபோது, அவர்கள் தனிப்பட்ட பொறுப்பின் உணர்வை இழந்தனர். "எனக்குக் கொடு" என்ற நன்றியற்ற எண்ணப்போக்கானது, நம்மை நமது சொந்த "உரிமைகள்" தவிர மற்ற எல்லாவற்றையும் அலட்சியப் படுத்துபவர்கள் ஆக்குகிறது. நாம் மற்றவர்களின் உரிமைகளை நமக்குப் பின்னால் சிதறடித்தவர்களாய் நாம் பெறுவதற்குத் "தகுதியானவர்களாக இருக்கின்றோம்" என்று நாம் நினைப்பவற்றை வற்புறுத்துகின்றோம்.

இந்த சந்தர்ப்பப் பொருளில் எரேமியா, ஏதோமியர்களுக்கு புலம்பும் காலம் வந்து கொண்டிருந்ததால் அவர்கள் தங்களால் இயன்றபோதே

களிகூறும்படி கூறினார் (வச. 21). அவர்கள் எருசலேமின் வீழ்ச்சியில் பங்கடைந்திருந்தனர், ஆனால் அவர்கள் தாங்கள் இருந்த நிலைக்குத் தண்டனையாக, அக்கிரமத்தைப் பானம்பண்ணும் காலம் வரும். மற்றும் அவர்கள் என்னவாய் இருந்தார்கள் என்று வெளிப்படுத்தப்படுவார்கள். கொள்ளையிடும் நாடு என்ற வகையில் அவர்கள் தங்கள் "உரிமைகளைத்" தேடியதில், யூதா மக்களின் உரிமைகளை மதிக்காது இருந்தனர். அவர்கள் யூதாவின் வீழ்ச்சியினால் லாபமடைந்ததால் சுயதிருப்தியடையவும் தாங்கள் தகுதியானவர்கள் என்று எண்ணவும் வேண்டாம் என்று எச்சரிக்கப்பட்டு இருந்தனர். கடைசியில், யூதாவுக்கோ ஏதோமைக் காட்டிலும் அதிகமான நம்பிக்கை இருக்கும். "சீயோன் குமாரத்திக்கு" தண்டனை முழுமையடைந் திருந்தது; அவள் மீண்டும் சிறைப்பிடிக்கப்பட மாட்டாள் (வச. 22). இருப்பினும், ஏசாவின் சந்ததியான ஏதோம் இனியும் இராதபடிக்கு மிகவும் முழுமையாகத் தண்டிக்கப்படும் (எரே. 49:10).

நாம் ஒன்றுமின்மைக்குத் தகுதியானவர்களாய் இருக்கின்றோம். நமக்கு ஆசீர்வாதங்கள் தேவனிடத்திலிருந்து வருகின்றன என்றும் சிலவேளைகளில் நமக்கு விரோதிகள் நமது சொந்த வீழ்ச்சிகளில் இருந்தே வருகின்றனர் என்றும் நாம் ஒப்புக்கொள்ள வேண்டும். தங்களுக்குரிய பொறுப்பை தாங்களே ஏற்றுக்கொண்டு, தேவனில் நம்பிக்கை வைத்து, எல்லாவற்றிற் காகவும் அவருக்கு மகிமை செலுத்துகின்றவர்களே உண்மையில் ஆசீர்வதிக் கப் பட்டவர்களாய் இருக்கின்றனர்.

## செய்தி என்ன?

நமது செவித்தினவுக்கேற்ற போதனைகளுக்குச் செவிசாய்த்தல் என்பது ஆவிக்குரிய அழிவிற்கான நிச்சயமான வழியாக உள்ளது (2 தீமோ. 4:3, 4). நமது உறுதிப்பாடுகளை சமரசப்படுத்துகிற பரிசுத்தமற்ற உடன்பாடு களுக்கு எதிராகப் பேசாத பிரசங்கியார்கள் எப்போதுமே இருந்துள்ளனர். தேவபக்தி இல்லாத மார்க்க நடத்துனர்கள், துன்மார்க்கமான தோழர்கள், மற்றும் சுயதிருப்தியான எண்ணப்போக்குகள் ஆகியவை அழிவிற்கு இட்டுச்செல்லும் விசாலமான வழியில் நம்முடன் கூட்டாளிகளாக உள்ளன (மத். 7:13, 14). நீங்கள் இந்த அபாயங்களில் ஏதாவது ஒன்றுடன் உறவு பட்டிருந்தால், அதிலிருந்து உங்களைப் பிரித்துக் கொண்டு, "விசுவாசத்தைத் துவக்குகிறவரும் முடிக்கிறவருமாயிருக்கிற இயேசு" வின் மீது உங்கள் நம்பிக்கையை முற்றிலுமாக வைப்பதற்கு இதுவே ஏற்ற வேளையாக உள்ளது (எபி. 12:1, 2).

நீங்கள் இவ்வகையான நடத்துனராக அல்லது பிரசங்கியாராக இருந்தால் அல்லது இருக்கும்படி சோதிக்கப்பட்டு இருந்தால், தேவனிடத் திற்குத் திரும்பி அவர் கூறுவது என்ன என்பதைக் கவனிக்க இதுவே ஏற்ற வேளையாக உள்ளது.